2. சிறப்புக் கவன ஈர்ப்பு

பொதுத் துறை சொத்துக்களை ஒன்றிய அரசு தனியாருக்கு விற்பனை செய்யவுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு, பொதுத் துறை சொத்துக்களை ஒன்றிய அரசு தனியாருக்கு விற்பனை செய்யவுள்ளது குறித்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, திரு. கு. செல்வபெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக, திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K. மாரிமுத்து ஆகியோர், விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களில், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

முற்பகல் 10–30

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 70 ஆண்டு காலமாகக் கட்டிக் காத்து, இந்தியாவிற்குப் பெருமை சேர்த்த சொத்துக்களை 7 ஆண்டுகளாக ஆட்சியில் இருக்கின்ற ஒன்றிய அரசு இப்போது விற்க முயற்சி செய்து வருகிறது. குறிப்பாக, தமிழகத்தில் பாரம்பரியமிக்க ஊட்டி இரயில் தடங்கள் உட்பட துறைமுகங்கள், விமான நிலையங்கள், நெடுஞ்சாலைகள் போன்ற நம்முடைய தமிழகத்தின் பெருமைமிக்க சொத்துக்களை விற்பதற்கு முயற்சி செய்து வருகிறார்கள். இந்தியா முழுவதும் இந்தப் பிரச்சினை இருக்கிறது; தமிழகத்திற்கு மட்டுமல்ல. ஏற்கெனவே நான் பல முறை சொன்னதுபோல், இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற, பெருமை சேர்க்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். நம்முடைய பாரம்பரியமிக்க சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்த அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் முதுகெலும்பாகத் திகழக்கூடிய, 'நவரத்தினா'

என்று அழைக்கப்படுகின்ற, இலாபகரமாகச் செயல்படுகின்ற இந்த நாட்டினுடைய பொதுத் துறை நிறுவனங்களான விமான நிலையங்கள், நெடுஞ்சாலைகள், இரயில் நிலையங்கள், துறைமுகங்கள் போன்ற, 60 ஆண்டு காலம் பாதுகாக்கப்பட்டு வந்த பொதுத் துறை சொத்துக்கள் 7 ஆண்டு காலத்திலே வேண்டிய நண்பர்களுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசால் விற்கப்படுகின்றன. இவையெல்லாம் மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசினுடைய அங்கமாக இருக்கக்கூடிய NITI Aayog என்ற அமைப்பு, National Monetisation Pipeline என்கின்ற ஒரு திட்டத்தை முன்னெடுத்திருக்கிறது. அதன் வாயிலாக Guidebook, Asset pipeline, Preparatory work என்று பல்வேறு வகைகளிலே அதற்கான தொகுப்புகளை உருவாக்கி PPP model-ல் Public Private Partnership என்கின்ற வகையிலே தனியாருடன் இணைந்திருக்கக்கூடிய வகையில், இந்தப் பொது சொத்துக்கள் எப்படி கையாளப்பட வேண்டுமென்கின்ற வகையிலே ஒரு கொள்கையினை அவர்கள் வெளியிட்டிருக்கின்றார்கள். அதிலே Asset monetisation என்பதில், தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய பொது சொத்துக்கள் எந்தெந்த வகையில் இருக்கும் என்பதில், பல மாநிலங்களிலே ஒரு மாநிலமாக தமிழ்நாட்டையும் அவர்கள் கண்டறிந்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டிருப்பதைப்போல சில சொத்துக்களை அவர்கள் பட்டியலிட்டிருக்கிறார்கள். உதாரணமாக, சில சாலைகள், ஊட்டியில் இருக்கக்கூடிய மலை இரயில், தூத்துக்குடியில் இருக்கக்கூடிய துறைமுகம், மொத்தமாக அல்லாமல் அங்கே இருக்கக்கூடிய berth facilities என்று சில விஷயங்களையெல்லாம் அவர்கள் பட்டியலிட்டு, இவற்றை தனியார்மயமாக்கக்கூடிய, அதில் தனியாரையும் உள்ளிழுக்கக்கூடிய வகையிலே சில கொள்கைகளை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். நம்முடைய கழக அரசைப் பொறுத்தமட்டில், இதில் மிகத் தெளிவாக இருக்கிறது. பொதுச் சொத்துக்களை தனியார்மயமாக்குவதை

கழக அரசு ஒரு காலத்திலும் ஏற்றுக்கொள்ளாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் உங்களிடத்தில் இங்கே திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பேருந்துகளை நாட்டுடைமையாக்குவதாக இருந்தாலும் சரி, வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட காரியமாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு முறையும் அவை பொதுத் துறை நிறுவனங்களாக வருவதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் காலத்திலிருந்து இந்தக் கழக அரசு தொடர்ச்சியாக மிகத் தீவிரமாக முயற்சிகளை எடுத்து, அந்தக் கொள்கையில் நாம் உறுதியாக இருக்கிறோம். இன்னொன்று, இதுபோன்ற தனியார்மயமாக்கக்கூடிய விஷயங்களில், ஒன்றிய அரசு மாநில அரசினைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்று நான் இந்த அவையில் வலியுறுத்த விரும்புகிறேன். இதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், இந்தப் பொதுத் துறை நிறுவனங்களை உருவாக்குவதற்கான நிலங்கள் போன்றவற்றையெல்லாம் மாநில அரசுதான், தமிழ்நாடு அரசுதான் அவர்களுக்குக் கொடுத்துள்ளது. எனவே, நம்முடைய சொத்துக்கள் அதிலே இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சேலம் உருக்காலைக்கு மிகப் பெரிய அளவில் நிலத்தை நாம் கொடுத்திருக்கிறோம். எனவேதான், சேலம் உருக்காலையைத் தனியார்மயமாக்குகின்ற விஷயத்திலும் நாம் தெள்ளத்தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். எனவே, கடந்த காலங்களில்கூட, தனியார்மயமாக்கப்படக் கூடிய சூழ்நிலை பொது சொத்துக்களுக்கு வந்தபோது திராவிட முன்னேற்றக் கழகம் தன்னுடைய கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்திருக்கிறது. எனவே, அதனுடைய வழியில் நின்று, இங்கே கருத்துகள் தெரிவித்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் மற்றவர்களுடைய உணர்வுகளையும் இந்த அரசு சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறது. இங்கே பல தொழிற்சாலைகள் இலாபகரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவையும்கூட தனியார்மயமாக்கப்படுவது என்பதைத் தேவையற்ற நடவடிக்கையாகவே அரசு கருதுகிறது. எனவே, அத்தகைய முயற்சிகளிலே ஒன்றிய அரசு ஈடுபடும் என்று சொன்னால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இருக்கக்கூடிய கழக அரசு அதனைக் கடுமையாக எதிர்க்கும் என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை நிறுவனங்களின் பிரச்சினை குறித்து நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் உரையாற்றி, அதற்கு மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்திருக்கிறார்கள். எனவே, நானும் அதுகுறித்து ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.*

முற்பகல் 10–35

நம் நாட்டினுடைய பொதுத் துறை நிறுவனங்கள், நம் அனைவருடைய பொதுச் சொத்தாகும். அவை நமது நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பிற்கும், சிறு, குறு தொழில்களின் ஆணிவேராக விளங்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கக்கூடிய பெருந்தொழில் நிறுவனங்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இலாப நோக்கம் மட்டுமே குறிக்கோளாக இல்லாமல், மக்கள் நலன் கருதி இயங்கி வரக்கூடிய பொதுத் துறை நிறுவனங்களை விற்பதோ, குத்தகைக்கு விடுவதோ தேச நலனுக்கு உகந்தது அல்ல என்பது நம்முடைய கருத்து. (மேசையைத் தட்டும் ஒலி)

எனவே, ஒன்றிய அரசினுடைய பொதுச் சொத்துக்களைத் தனியார்மயமாக்கும் போக்கினை எதிர்க்கக்கூடிய வகையிலே, மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு நான் இதைச் சுட்டிக்காட்டி, நம்முடைய எதிர்ப்பைத் தெரிவிக்கக்கூடிய வகையில் கடிதம் எழுதவிருக்கிறேன் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

1987 ஆம் ஆண்டு நடைபெற்ற இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் உயிரிழந்த சமூகநீதிப் போராளிகளுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் மணிமண்டபம் அமைத்தல் குறித்த தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கையளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர்*